# நோயாளிக்குத தகவல்

## சிகிச்சை மருந்து:

# உயர் இரத்த அழுத்தம்

*எசீஇ (எஞ்சோடென்சின் கன்வேர்டிங் என்ஸைம்) இன்ஹேபிட்டர்ஸ்*



Medicine To Treat: Hypertension - ACE Inhibitors

## எசீஇ இன்ஹேபிட்டர்ஸ் எதற்கு பயன்படுத்தப்படுகிறது?

இரத்த குழாய்களை குறுகலாக்கும் எஞ்சோடென்சின் II எனும் பொருள் உற்பத்தியாகுவதை குறைக்க எசீஇ இன்ஹேபிட்டர்ஸ் பயப்படுத்தப்படுகிறது.

## எசீஇ இன்ஹேபிட்டர்ஸ் விளைவிக்கக்கூடும் பக்கவிளைவுகள் யாவை?

இதனால் தொடர்ச்சியான மற்றும் எரிச்சல் உண்டாக்கும் வரட்டு இரும்மல் ஏற்படக்கூடும். மற்ற பக்க விளைவுகள் அரிதானவை. அவற்றுள் தோல்சிரங்கு, சுவைக்கும் தன்மை இழத்தல், மற்றும் எழும்போது தலை சுற்றல் போன்றவை அடங்கும்.

## நான் எடுக்கவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாவை?

நீங்கள் கருவுற்று இருந்தாலோ, கருதறிக்க முற்பட்டிருந்தாலோ உங்கள் மருத்துவரிடம் தெரிவியுங்கள். இந்த மருந்து டையூராடிக்ஸ் வகை மருந்துகளுடன் உட்கொள்ளக்கூடாது. அவ்வாறு செய்வது உங்கள் இரத்த அழுத்தம் மேலும் குறைவதற்கு வாய்ப்பு அளிக்கும். இந்த மருந்தை உட்கொள்ளும்போது மருத்துவர் உங்களை கண்காணிக்க நேரிடலாம்.

*குழந்தைகளுக்கு எட்டாத இடத்தில் மருந்துகளை வைத்திருங்கள்*

## பொதுவாக பயப்படுத்தப்படும் எசீஇ இன்ஹெபிட்டர்ஸ் யாவை?

- கெப்டோபிரில்
- இனலபிரில்
- இலிசினோபிரில்

## நான் ஒருமுறை மருந்தை பயன்படுத்த மறந்து விட்டால் என்ன செய்வது?

- அவ்வாறு மருந்தை உட்கொள்ள மறந்தால் உங்களுக்கு நினைவு வந்தவுடன் உட்கொண்டு விடுங்கள். ஒருசமயம் அடுத்த வேளைக்கான மருந்தை உட்கொள்ள வேண்டிய காலகட்டம் வந்துவிட்டால் வழக்கமான அளவை உட்கொள்ளுங்கள். மருந்தின் அளவை இரட்டிப்பாக்காதீர்கள்.

## என்னுடைய மருந்துகளை எப்படி பாதுகாக்க வேண்டும்?

- வேறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தாலன்றி மருந்தை வெப்பம் குறைவான, ஈரமற்ற இடத்திலும் நேரடி சூரிய ஒளிபடாத இடத்தில் வைக்கவும்.
- அதற்குரிய ஒட்டுவில்லையுடைய உரைகலத்தில் வைத்திருங்கள். வெவ்வேறு விதமான மருந்துகளை ஒரே உரை, கலத்தில் சேர்த்து வைக்கக்கூடாது.

*காலாவதியான அல்லது இனியும் தேவைப்படாத மருந்துகளை ஒதுக்கி விடுங்கள்*

SingHealth
Ministry Of Health
National Healthcare Group
Printed in 2002